[1978 செப்டம்பர் 14

தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் புத்தக வங்கிகள்.

*வினா எண் 209—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது மாநிலத்திலுள்ள பெரிய நகரங்களில், கல்லூரி செல்லும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக புத்தக பாங்குகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் புத்தக வங்கிகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் குறிப்பிட்ட ஒருசில நகரங் களில் மட்டுமே இந்த வங்கிகள் அமைக்கப்பட இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். தொழிலாளிகள், விவசாயத் தொழிலாளிகள் நிரம்ப இருக்கிறார்கள். எனவே, பரவலாக அங்கங்கே இருக்கிற வட்டத் தலைநகரங்களிலே அப்படிப்பட்ட புத்தக வங்கிகளைத் துவக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 'லேபர் வெல்பேர் ஃபண்ட்' என்பதிலேயிருந்து இது செலவு செய்யப்படுகிறது. அதற்காக ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு அடிக்கடி கூடி எடுக்கும் முடிவுக்கேற்ப இது விரிவு செய்யப்படுகிறது. குழுவின் முடிவிற்கொப்ப இந்த அரசு செயல்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர் களே, தொழிலாளர் குழந்தைகள் நிறையப் புத்தகங்கள் வாங்கு வதற்காக இந்த பாங்க் அமைக்கப்படுவதாகச் சொன்னார். சில ஊர்களிலே, குறிப்பாக, விக்கிரமசிங்கபுரத்திலே 10,000—க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் 4 கல்லூரிகள் இருக்கின்றன. அங்கு ஒரு புத்தக பாங்க் இருக்க வேண்டியது அவசியம். அதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது, அதற்காக அமைக்கப் பட்டிருக்கிற குழு கூடி— அதில் தொழிற்சங்கத் தலைவர்கள் எல் லாம் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்— அவர்கள் எடுக்கக்கூடிய முடிவுக்கு ஏற்ப தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். குழுவின் தலைவர் தொழிலாளர் நல அமைச்சர்தான்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வங்கியை ஏற்படுத்துவதற்கு இதுவரையிலும் அந்தக் குழு எவ்வளவு தொகை அனுமதித்துள்ளது ? இதுவரையிலும் ஏதேனும் அதற்காகச் செலவழிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : இந்தப் புஸ்தக வங்கிகள் ஏற்படுத்துவதால் புஸ்தகங்கள் தொழிலாளர் குழந்தைகளுக்கு இலவசமாகக் கொடுக் கப்படுமா ? அல்லது குறைந்த விலையில் வழங்கப்படுமா ? அப் படிப்பட்ட ஏற்பாடுகள் எந்த எந்த இடங்களில் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த வருஷமே இப் பொழுது புஸ்தகங்கள் கிடைக்காத நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஏதாவது அந்த வங்கிகளில் செய்ய முடிந்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்த வங்கிகள் அங்கு போய் படிப்பதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடாகும். இந்த வெல்ஃபேர் பண்டில் பணத்திற்குப் பஞ்சம் இல்லை. எனவே நாம் எல்லாம்—குழு—உட்கார்ந்து பேசும் பொழுது விரிவான திட்டங்களை வகுத்து தொழிலாளர்கள் குழந்தைகளுக்குப் பலன் அளிக்கும் வகையில் செயல்படுத்த முயற்சி எடுக்கலாம்.

சிதம்பரம் நகருக்குக் குடி நீர் வழங்கல்.

*வினு எண் 210—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு தயவுசெய்து விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் நகரில் குடி தண்ணீர் குறையினை நீக்க பூஸ்டர் சிஸ்டம் அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS